தினமணி

## பாசன வாய்க்காலில் சாயக்கழிவு நீர்: விவசாயிகள் மறியல் போராட்டம்

First Published : 03 Mar 2011 12:36:08 PM IST

ஈரோடு, மார்ச் 2: பாசன வாய்க்காலில் சாயக்கழிவு நீரைக் கலப்பவர்கள் மீது நடவடிக்கையெடுக்க வலியுறுத்தி விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஈரோடு மாவட்டம், வில்லரசம்பட்டி பகுதியில் கீழ்பவானி பாசனம் மூலம் சுமார் 5000 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. இப்பகுதியில் உள்ள சாய ஆலைகள் லாரிகள் மூலம் சாயக்கழிவு நீரைக் கொண்டு வந்து இரவு நேரத்தில் வாய்க்காலில் கலந்துவிடுவதாகவும், இதனால் இப்பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கையெடுக்கவும் வலியுறுத்தி இப்பகுதி விவசாயிகள் புதன்கிழமை காலை வில்லரசம்பட்டியில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது சாய ஆலைக் கழிவு கலந்துள்ளதால் வாய்க்காலில் செல்லும் நீரையும் பாட்டில்களில் கொண்டுவந்திருந்தனர் (படம்).

போராட்டத்தையடுத்து, போலீஸ் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் அங்கு சென்று சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து விரைவில் நடவடிக்கையெடுக்கப்படும் என உறுதியளித்தனர். இதனையடுத்து விவசாயிகள் போராட்டத்தை விலக்கிகொண்டனர்.

## விவசாயத்துக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்க வலியுறுத்தல்

First Published : 03 Mar 2011 11:30:32 AM IST

கரூர், மார்ச் 2: விவசாயத்துக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்க வேண்டும் என்று புதிய தமிழகம் கட்சி வலியுறுத்தியது.

அந்தக் கட்சியின் தோகைமலை ஒன்றியம் சார்பில் கட்சிக் கொடியேற்று விழா, சிறப்புக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு கட்சியின் ஒன்றியச் செயலர் பி. குமார் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் ரா. பாண்டியன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று கட்சிக் கொடியை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து, நடைபெற்ற கூட்டத்தில் சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்குப் பாடுபட வேண்டும். கிருஷ்ணராயபுரம் சட்டப்பேரவைத் தொகுதியை புதிய தமிழகம் கட்சிக்கு ஒதுக்குமாறு கோரிக்கை விடுக்க வேண்டும்.

தோகைமலையில் கல் உடைக்கும் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு நிலம், பட்டா வழங்க வேண்டும். தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத் தொழிலாளர்களுக்கு ஊதியமாக ரூ. 130 வழங்க வேண்டும். 60 வயதான முதியோர், விதவைகளுக்கு முறையாக உதவித் தொகை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குளித்தலை ஒன்றியச் செயலர் எஸ். மோகன், மாவட்ட துணைச் செயலர்கள் டி. மகபூப் பாட்சா, மாயவன், இளைஞரணிச் செயலர் என். ஜானகிராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கட்சியின் ஒன்றிய துணைச் செயலர் கே. முருகன் வரவேற்றார். கே. குமார் நன்றி கூறினார்.

**ஒட்டன்சத்திரம் காய்கறிச் சந்தையில் தக்காளி விலை வீழ்ச்சி**

First Published : 03 Mar 2011 10:19:14 AM IST

ஒட்டன்சத்திரம், மார்ச் 2: ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறிச் சந்தையில் முருங்கை மற்றும் தக்காளி விலைகள் குறைந்துள்ளன.

ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள பகுதியில் முருங்கை மற்றும் தக்காளி அதிக அளவு சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சின்ன வெங்காயத்துக்குள் ஊடு பயிராக முருங்கைக்காய் மற்றும் தக்காளி பயிர் செய்யப்பட்டது.

தற்போது சின்ன வெங்காயம் தோண்டி பட்டறை போடப்பட்டு வருகிறது.

இதனால் விவசாயிகள் இருக்கின்ற தண்ணீர் முழுவதையும் முருங்கை, தக்காளிப் பயிருக்கு பாய்ச்சுகின்றனர்.

இதனால் உற்பத்தி அதிகரித்து சந்தையில் முருங்கை மற்றும் தக்காளி வரத்து அதிகரித்து உள்ளதால், விலைகள் வீழ்ச்சி அடைந்துள்ளன.

புதன்கிழமை சந்தையில் 14 கிலோ கொண்ட ஒரு தக்காளி பெட்டி ரூ. 35-க்கும், ஒரு கிலோ முருங்கைகாய் ரூ.42-க்கும் விற்பனையானது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு முருங்கை வரத்து இல்லாததால், குஜராத் மாநிலத்தில் இருந்து லாரி மூலம் கொண்டு வரப்பட்டு, ஒரு கிலோ அதிகப்பட்சமாக ரூ. 250 வரைக்கும் விற்பனையானது.

அதே போல, தக்காளிச் செடிகள் பருவ மழையால் பூக்கள் உதிர்ந்து விட்டன.

இதனால் 14 கிலோ கொண்ட தக்காளி பெட்டி ரூ. 400 வரைக்கும் விற்பனையானது என்பது குறிப்பிடத்தக்கது.

**"உழவர் சந்தையில் விவசாயிகள் மட்டுமே விற்க வேண்டும்'**

First Published : 03 Mar 2011 11:27:39 AM IST

பெரம்பலூர், மார்ச் 2: உழவர் சந்தைகளில், விவசாயிகள் மட்டுமே காய்கறிகளை விற்பனை செய்ய வேண்டும், வியாபாரிகளை முற்றிலும் தடுக்க வேண்டும் என்றார் கண்காணிப்பு அலுவலரும், சமூக நலம், சத்துணவுத் திட்ட அரசு முதன்மைச் செயலருமான மோகன் பியாரே.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மத்திய, மாநில அரசுகளின் திட்டப் பணிகள் குறித்து, அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பங்கேற்ற மோகன் பியாரே பேசியது;

பெரம்பலூர் மாவட்டத்தில், மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றன. மேலும், அனைத்து திட்டப் பணிகளும் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன.

வேளாண் துறையில் பணியாற்றும் அலுவலர்கள், அனைத்து விவசாயிகளின் நிலங்களையும் மண் பரிசோதனை செய்து, அவற்றின் முடிவின்கேற்ப பயிர்களைச் சாகுபடி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அரசு, வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையிலும், இலவசமாகவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இவற்றின் மூலம், விவசாயிகள் முழுமையான பயன் பெற்றுள்ளார்களா என்பதை களப்பணியாளர்கள் நேரடியாகச் சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில், அரசு அலுவலர்கள் முழு மனதோடு தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களும், இதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர் அவர்.

முன்னதாக நொச்சியம், அரணாரை, செஞ்சேரி உள்ளிட்ட கிராமங்களில் உள்ள, குழந்தைகள் மையத்தையும், செஞ்சேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வேலூர் அரசு உயர்நிலை பள்ளியில் உள்ள சத்துணவு மையங்கள், குழந்தைகள் மையத்தில் ஆய்வுகொண்ட அவர், அரிசி, கொண்டக்கடலை உள்ளிட்ட பொருள்களின் இருப்பு, குழந்தைகளுக்கு வழங்கப்படும் முட்டையின் எடை சரியாக உள்ளதா என்பதை ஆய்வு செய்தார். மேலும், குழந்தைகள், கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும் சத்து உருண்டைகள் முறையாக வழங்கப்படுகிறதா என மையத்துக்கு வந்த பெண்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர், புதுநடுவலூர் கிராமத்தில் உள்ள நூலகத்தில் ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள புத்தகங்கள் முறையாகப் பராமரிக்கபடுகிறதா என்பதைப் பார்த்து, அக்கிராமத்தில் உள்ள

மாணவ, மாணவிகள், பொதுமக்கள் நூலகத்தைப் பயன்படுத்துகிறார்களா என்பதையும் கேட்டறிந்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் எம்.ஏ. சுப்பிரமணியன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் ரேவதி, மாவட்ட வழங்கல் அலுவலர் சுந்தர்ராஜன், செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர் கி. கண்ணதாசன், மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் பாசல் அலி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

**ஒரு மரத்தின் விலை ரூ.30 லட்சம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2011,00:00 IST



**விருதுநகர்:** செஞ்சந்தன மரங்களுக்கு கதிர்வீச்சை கட்டுப்படுத்தும் தன்மை உள்ளது என்பதால், அணு உலைகளுக்கான மர வேலைகள் அனைத்தும் இந்த மரங்களை கொண்டே செய்யப்படுகின்றன. இம்மரத்திற்கு ஈர்ப்பு விசை அதிகம் உள்ளதால் இடி, மின்னல் தாக்கினாலும் முழுமையாக ஈர்த்துக் கொள்ளும். அடர்த்தியான காடுகளில் வளரும் இம்மரங்களை வீடுகளிலும் வளர்க்க முடியும். இந்த மரங்களை வளர்க்க வருவாய்த் துறையிடம் அனுமதி பெற வேண்டும்.

சம்பந்தப்பட்ட நிலத்தின் சர்வே எண், அடங்கலில் இந்த மரம் நடவு குறித்து கிராம நிர்வாக அலுவலர் பதிவு செய்வார். பின், அதன் வளர்ச்சிக்கேற்ப 25 முதல் 150 ரூபாய் வரை விற்கப்படும் செஞ்சந்தன மரக்கன்றை வாங்கி வளர்க்கலாம். 30 ஆண்டுகளுக்கு பின், அரசே அந்த மரத்தை தனியாருக்கு ஏலம் விடும். அதில், 80 சதவீதம் மரத்தின் உரிமையாளருக்கும், 20 சதவீதம் அரசும் எடுத்துக் கொள்ளும். "இந்த மரக்கன்றுகளை வளர்க்கும் போது அதன் அருகில் அகத்தி, சவுக்கு மரக்கன்றுகளை துணையாக நட வேண்டும். செஞ்சந்தன மரங்களின் வேர், துணை மரங்களின் வேரிலிருந்து சத்தை உறிஞ்சி வளரும். 30 ஆண்டுகள் வளர்ந்த மரங்களுக்கே அணுக்கதிர் வீச்சு தாக்கும் சக்தி அதிகம். இந்த மரம் ஒன்றின் விலை 30 லட்சம் ரூபாய்' என்கிறார் செஞ்சந்தன மரத்தை விருதுநகரில் வளர்த்து வரும் விவசாயி சிவகுமார்.

**குச்சிகளில் படரும் பட்டாணி கொடிகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2011,00:00 IST



நீலகிரி: மேற்கு தொடர்ச்சி மலைகளுக்கு இடையே இயற்கையழகு மிகுந்த மாவட்டமாக நீலகிரி திகழ்கிறது. எங்கு பார்த்தாலும் பசுமை நிறைந்த மலைச் சரிவு பகுதிகளில் பெரும்பாலும் காபி, டீ எஸ்டேட்டுகள் தான் காணப்படுகின்றன. இங்கு சமவெளியான பகுதிகளில் உள்ள சிறு மற்றும் குறு நிலங்களில் உருளைக்கிழங்கு, பீட்ரூட், பட்டாணி போன்றவை விளைவிக்கப்படுகின்றன. கோத்தகிரி இடுஹட்டி கிராமத்தில் பட்டாணி பயிரிடப்பட்டுள்ளது. "பட்டாணி கொடிகள் வளர்ந்து, நல்ல பலனை தர வேண்டும் என்றால், அவை படர குச்சிகளை நட வேண்டியது அவசியம். இதற்காகவே, குறிப்பிட்ட அளவில் பட்டாணிச் செடிகள் வளர்ந்தவுடன், அவற்றின் அருகில் குச்சிகளை நடுகிறோம்' என்கின்றனர் பட்டாணி விவசாயிகள்.

**இயற்கை பாதுகாப்பு கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2011,03:01 IST

கோவை : குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரியின் இயற்கை கழக உறுப்பினர்கள் சார்பில், இயற்கை பாதுகாப்பு குறித்த கருத்தரங்கின் துவக்க விழா "வி-கேன்' எனும் தலைப்பில் நடந்தது. துவக்க விழாவில், கல்லூரி மாணவர் ராமகுரு வரவேற்றார். கல்லூரி முதல்வர் ராமச்சந்திரன் துவக்கி வைத்தார். இயற்கை பாதுகாப்பு பற்றிய திரைப்பட தயாரிப்பாளர் சேகர் டடாத்ரி தலைமை வகித்தார். கருத்தரங்கில், அவர் இயக்கிய திரைப்படங்கள் மாணவர்களுக்கு திரையிடப்பட்டன. "சேவ் அவர் ÷ஷாலஸ்' எனும் திரைப்படம், கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரை அருகேயுள்ள மலைகள் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்பு குறித்து விளக்குகிறது. காடுகள், ஆறுகள் மற்றும் இயற்கை பாதுகாப்பு குறித்த கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. குடிநீரின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டன.

**உழவர் அட்டைவழங்கும் விழா**

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2011,01:01 IST

வருஷநாடு:மயிலாடும்பாறையில் உழவர் அட்டை வழங்கும் விழா நடந்தது. ஊராட்சித்தலைவர் பரமேஸ்வரன் தலைமை வகித்தார். ஆண்டிப்பட்டி தாசில்தார் ராஜேஸ்வரன்,சமூக நலத்திட்ட தாசில்தார் சோமு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், 120 பயனாளிகளுக்கு உழவர் பாதுகாப்பு அட்டை வழங்கப்பட்டது.

**செஞ்சியில் கரும்பு எடை குறைபாடு பிரச்னை: கலெக்டர் தலைமையில் அமைதிக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2011,03:52 IST

விழுப்புரம் : செஞ்சியில் கரும்பு எடையில் முறைகேடு பிரச்னை குறித்து விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் அமைதிக் கூட்டம் நேற்று நடந்தது. எடை முறைகேடு வெளிப்படையாக தெரிந்த நிலையில் குழு அமைத்து ஆய்வு செய்வதாக கூறுவது கண்துடைப்பென விவசாயிகள் அதிருப்தி தெரிவித்தனர். விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் பழனிசாமி தலைமையில் நடந்த அமைதிக் கூட்டத்தில் கரும்பு விவசாயிகள் பேசும்போது, ஒரு கரும்பு லோடில் 4 டன் எடை குறைபாடு நடந்துள்ளது. ஆலை துவங்கி மூன்றாண்டுகளும் இந்த குறைபாடுகள் எழுகிறது.

காலம் காலமாக கரும்பு எடை பார்க்க எந்த விவசாயியும் சென்றதில்லை, ஆலை நிர்வாகம் கொடுக்கும் ரசீதை நம்பியே கரும்பு கொடுத்து வருகிறோம். முறைகேடு எழுந்ததால் இனி வெளியே எடை வைத்து பார்த்து அனுப்புவார்கள். எடை குறைந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றனர்.

செந்தமிழ்ச்செல்வன் எம்.எல்.ஏ., பேசும்போது, ஆலை நிர்வாகத்தினர் குறைபாடு தெரிந்த உடனேயே அதனை சரி செய்திருக்கலாம். அவர்கள் வெளியே வராததால் பிரச்னை ஏற்பட்டது. விவசாயமே நஷ்டத்தில் இருப்பதால் கரும்பு போன்ற பயிர்களை செய்கின்றனர். இதிலும் முறைகேடு இருந்தால் முற்றிலும் விவசாயம் பாதிக்கும். உண்மையை ஆய்வு செய்துள்ள அதிகாரிகள், விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க ஆவன செய்ய வேண்டும் என்றார்.
முன்னாள் எம்.எல்.ஏ., தமிழ்மொழி பேசும் போது, ஒரே கரும்பு லோடு எடை குறைவில் 8,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதால் விவசாயிகள் கொந்தளித்துப் போனார்கள். நம்பி கரும்பு ஏற்றி அனுப்பும் விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகம் பதில் கூறியிருக்க வேண்டும். பிரச்னையை ஆய்வு செய்துள்ள நிர்வாகம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றார்.

ராஜஸ்ரீ ஆலை நிர்வாகி அண்ணாதுரை கூறும்போது, விவசாயிகளை ஏமாற்றும் எண்ணம் நிர்வாகத்திற்கில்லை. திறந்த வெளியில் எடைமேடை உள்ளதால் விவசாயிகள் எடை பார்த்துக் கொள்ளலாம். அன்றைய தினம் எடையில் தவறு நடந்துள்ளது. வண்டி நிறுத்தியதில் குறைபாடு காரணமாக இருக்கலாம். தவிர்க்க முடியாத சம்பவம் நிகழ்ந்துவிட்டது. வெளியே எடை போட்டு வந்தாலும் நாங்கள் ஏற்கிறோம். அரவைக்கு விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

கலெக்டர் பழனிசாமி பேசும்போது, விவசாய குழுவினர் முன்னிலையில் வெளிப்படையான எடை இருக்க வேண்டும். குறைபாடு எழாத வகையில் எடைமேடையை சீரமைக்க வேண்டும். இதற்கு சரியான ஊழியர்களை நியமிக்க வேண்டும். விவசாயிகளுக்கு மரியாதை அளித்து உரிய தகவல் கொடுத்திட வேண்டும். கடந்த காலங்களில் குறைபாடுகள் நடந்துள்ளதா என்பதை ஆய்வு செய்திட குழு அமைக்கப்படும். அந்த குழுவினர் கரும்பு வரத்து சர்க்கரை அளவினை ஆய்வு செய்து உண்மையை கண்டறிவார்கள். முறைகேடுகள் நடந்திருந்தால் நஷ்ட ஈடு வழங்கப்படும் என்றார். அப்போது திடீரென எழுந்த விவசாயிகள், எடை முறைகேடு வெளிப்படையாக தெரிந்துள்ளது. அதற்கு இழப்பீடு வழங்கவோ, முறைகேடுகள் குறித்து நடவடிக்கை எடுக்காமல் குழு அமைப்போமென கூறுவது கண்துடைப்பு என கலெக்டரிடன் கருத்துக்கு அதிருப்தி தெரிவித்து கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

நெல் பயிரில் துத்தநாகம் பற்றாக்குறை : கி.கிரி விவசாயிகள் பெரும் கலக்கம்

பதிவு செய்த நாள் : மார்ச் 03,2011,23:46 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில் பயிரிடப்பட்டுள்ள நெல் பயிரில் துத்தநாக பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், மகசூல் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நவரை பட்டத்தில் 10 ஆயிரத்து 700 ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. குறிப்பாக, கே.ஆர்.பி., அணை பாசன பகுதிகளான அவதானப்பட்டி, கால்வே அள்ளி, மலையாண்டஅள்ளி, சவுளூர், அரசம்பட்டி, பாரூர் ஆகிய பகுதிகளில், அதிக அளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இவ்வாறு பயிரிடப்பட்டுள்ள நெல் பயிர் தற்போது களை எடுக்கும் பருவத்தில் உள்ளது.

அணை பாசன பகுதியில், நெல் வயலில் எப்போதும் தண்ணீர் தேங்கியுள்ளதால், மண்ணில் காற்றோட்டம் குறைந்து நுண்ணூட்ட சத்துகளின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, துத்தநாக சத்து குறைபாட்டால், பல நெல் வயல்களில் பயிர்கள் காய்ந்து வட்ட, வட்டமாக பாதிக்கப்பட்டுள்ளது. நெல் மகசூல் 50 சதவீதத்தில் இருந்து 100 சதவீதம் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அணை பாசன பகுதியில் நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

துத்தநாக குறை பாட்டை போக்கும் முறை குறித்து வேளாண் துறையினர் கூறியது: பெரும்பாலான விசாயிகள் நெல் பயிரிருக்கு தழை, மணி, சாம்பல் சத்துகளை மட்டும் இடுகின்றனர். பயிருக்கு முக்கிமான இரும்பு, மாங்கனீசு, துத்தநாகம், தாமிரம், போரான், மாலிப்டினம், குளோரின் போன்ற நுண்ணூட்ட சத்துகளை போதிய அளவில் இடுவதில்லை. பொதுவாக நூண்ணூட்டங்கள் பயிரில் ஒரு கிரியா ஊக்கியாகவும், என்சைம்களை இயக்கவும் உதவுகிறது. நூண்ணூட்ட சத்துகள் பயிருக்கு மிக குறைந்த அளவே தேவைப்பட்டாலும் அதன் குறைபாடு இருந்தால் பயிர்கள் வளராமல் போய் விடும். அல்லது வளர்ந்து காய்காமல் போய் விடும். இதனால் மகசூல் 50 சதவீதத்தில் இருந்து 100 சதவீதம் பாதிக்கப்படும்.

கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில் நெல் பயிரிட்டுள்ள வயல்களில் தண்ணீர் அதிக அளவில் தேங்கியுள்ளதால், துத்தநாக பற்றாக்குறை ஏற்பட்டு பயிர்கள் கருகி வருகின்றனர். விவசாயிகள் இந்த குறைபாட்டினை நீக்க பயிர் நடவுக்கு முன்பாக துத்தநாக சல்பேட்டினை ஹெக்டேருக்கு 25 கிலோ என்ற அளவில் 50 கிலோ மணலுடன் கலந்து சீராக நிலத்தில் தூவவேண்டும்.
அடி உரமாக துத்தநாக சல்பேட் இடாவிட்டால், 0.5 சத துத்தநாக சல்பேட் கரைசலை இலை வழி உரமாக வளர்ச்சி பருவத்திலும், பூக்கும் பருவத்திலும் தெளிக்க வேண்டும். குறிப்பாக வயல்களில்

போதுமான அளவு தண்ணீர் பாய்சி தேவையான நேரத்தில் வயல்களை காயவைக்க வேண்டும். இது குறித்து மேலும் விபரங்கள் அறிய அந்தந்த பகுதி வேளாண் அலுவலரை அணுகலாம்.

**இயற்கை வழி வேளாண் பயிற்சி முகாம் : வேளாண் விஞ்ஞானி பங்கேற்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 03,2011,23:56 IST

குளித்தலை: ""பன்னாட்டு கம்பெனிகள் தண்ணீரால் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளை விற்பனை செய்கின்றன. இவை அனைத்தும் மனித வாழ்வுக்கு ஏற்றதல்ல. இந்த வகை உணவுகளின் விலை அதிகமாகவும், சத்து இல்லாமலும் உள்ளன," என இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.
குளித்தலை அருகே புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் மையத்தில் கரூர் நபார்டு வங்கி உதவியுடன் வானகம் நிறுவனம் சார்பில், இயற்கை வழி வேளாண் பயிற்சி முகாம் துவங்கப்பட்டது.

இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தலைமை வகித்து பேசியதாவது: உலகம் முழுவதும் வறட்சி, கடும் வெள்ளப் பெருக்கு, நில நடுக்கம் மற்றும் பல்வேறு இயற்கை சீற்றங்களால் அனைத்து இயற்கை வளங்களையும் இழந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது. கம்பு, கேழ்வரகு, கோதுமை போன்ற பயிர் வகைகள் சாகுபடி செய்த நிலங்களில் சோயா, மொச்சை, கால்நடை தீவனங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

ஒரு கால்நடைக்கு உடல் எடை ஒரு கிலோ அதிகரிக்க ஒன்பது கிலோ தீவனம் தேவைப்படுகிறது. பன்னாட்டு கம்பெனிகளின் லாப நோக்கு தந்திரத்தால் உலக உணவு உற்பத்தியில் தற்போது பெரும் பங்கு கால்நடை தீவனமாகிறது. பன்னாட்டு கம்பெனிகள் தண்ணீரால் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளை விற்பனை செய்கின்றன. இவை அனைத்தும் மனித வாழ்வுக்கு ஏற்றதல்ல.

இந்த வகை உணவுகளில் விலை அதிகமாகவும், சத்து இல்லாமலும் உள்ளன. இதனால், சத்துணவு பற்றாக்குறை ஏற்பட்டு, நோய் எதிர்ப்பு சக்தியும் குறைந்து பிறக்கும் குழந்தைகள் மற்றும் முதியோர்கள் இறந்து விடுகின்றனர். பெண்களுக்கு ரத்தசோகை நோய் ஏற்படுகிறது. சத்தான உணவுகள் அனைவருக்கும் கிடைக்க விவசாயிகள் இயற்கை வழி வேளாண்மையை பின்பற்றி உணவு பொருள் உற்பத்தி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கரூர் நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் பார்த்திபன், முன்னோடி வங்கி மேலாளர் சந்திரசேகரன், சரஸ்வதி எஸ்.கே.வி.கே., மைய ஒருங்கிணைப்பாளர் திரவியம், வானகம் நிறுவன செயலாளர் முரளி, தனசேகர், வள்ளியம்மை, விஜய் மற்றும் தீவிர விவசாயிகள், வேளாண் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். முன்னதாக எஸ்.கே.வி.கே., தொழில்நுட்ப வல்லுநர் தமிழ்செல்வி வரவேற்றார்.

**இயற்கை உணவுவிழிப்புணர்வு கூட்டம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 03,2011,23:59 IST

அருப்புக்கோட்டை: அருப்புக்கோட்டையில் ஜெயண்ட்ஸ் குழு சார்பில், இயற்கை உணவு விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. தலைவர் திருவண்ணாமலை தலைமை வகித்தார். துணை தலைவர் வெள்ளைய ரெட்டி முன்னிலை வகித்தார். நிர்வாக இயக்குனர் காத்தலிங்கம் வரவேற்றார். தமிழ்நாடு இயற்கை மருத்துவ சங்க தலைவர் நாகலிங்கனார், இயற்கை உணவு மற்றும் மருத்துவம் பற்றி விளக்கினார். நிர்வாக இயக்குனர் தங்கராஜ் நன்றி கூறினார்.

தினத் தந்தி

## கோவை வனக் கல்லூரியில் சவுக்கு மர சாகுபடி கருத்தரங்கு

கோவை, மார்ச்.4–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலிபிரவுன் ரோட்டில் உள்ள வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் சார்பில் சவுக்கு மர சாகுபடி குறித்த 2 நாள் கருத்தரங்கு நடைபெற்று வருகிறது. இதன் தொடக்க விழா மரப்பெருக்கு நிறுவனத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடந்தது.

இயக்குனர் கிருஷ்ணகுமார் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக மாநில திட்டக்குழு உறுப்பினர் ஜி.குமாரவேலு கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்து மலரை வெளியிட்டு பேசும்போது, சவுக்கு மர உற்பத்தியானது கட்டிடப்பணி, பேப்பர் மற்றும் பயோ–கேஸ் தயாரிக்க பயன்படுகிறது. தமிழகத்தை பொறுத்தவரை 123 லட்சம் எக்டேர் நிலம் உள்ளது. இதில் 52 லட்சம் எக்டேர் நிலம் தரிசாக கிடக்கிறது. இந்த நிலங்களில் சவுக்கு மரக் கன்றுகளை நட்டால் 3 வருடங்களில் அறுவடை செய்து அதன் பலனை பெற முடியும். மேலும் இந்த மரங்களை விவசாயிகள் ஊடுபயிராக பயிரிட முடியும் என்றார்.

விழாவில் குஜராத், ஆந்திரா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள், பேப்பர் மில் உற்பத்தியாளர்கள் மற்றும் வன மரபியல் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் வன விரிவாக்க அலுவலர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

இதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் ஜெயராஜ் செய்திருந்தார்.

## காலநிலை மாற்றத்தை அறிய தமிழ்நாட்டில், 161 இடங்களில் தானியங்கி வானிலை மையங்கள் வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் தகவல்

கோவை, மார்ச்.4–

காலநிலை மாற்றத்தை அறிந்து கொள்ள தமிழ்நாட்டில் 161 இடங்களில் தானியங்கி வானிலை மையங்கள் அமைக்கப்படும் என்று கோவை வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கூறினார்.

கருத்தரங்கு

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் காலநிலை மாற்றத்தின் தாக்கம்– தவிர்க் கும் வழிமுறைகள் என்ற தலைப்பிலான கருத்தரங்கு நேற்று தொடங்கி வருகிற 15–ந் தேதி வரை நடைபெறுகிறது. இதன் தொடக்க விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடைபெற்றது. ஆராய்ச்சி மைய தலைவர் கீதாலட்சுமி வரவேற்றார்.

பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்கி கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

காலநிலை மாற்றம்

காலநிலை மாற்றம் மனித சமுதாயத்துக்கு பெரும் சவாலாக உள்ளது. குறிப்பாக வேளாண்மையின் நிலைத்த தன்மைக்கும், உலக உணவு பாதுகாப்புக்கும் பெரும் இடர்பாடு ஏற்பட்டு உள்ளது. தற்போது காற்றில் கலக்கும் கரியமில வாயுவின் அளவு ஆண்டுக்கு .5 சதவீதம் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக வெப்ப நிலை அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது. இதனால் நீர் ஆதாரத்துக்கு காரணமான பனிப்பாறைகள் உருகி பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. மேலும் மழை பொழிவின் அளவு, பயிர்களின் உற்பத்தி திறன் குறையும் வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது. இதனால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க பணிகளை மேற்கொண்டு வருகிறோம். இதற்காக பல்கலைக்கழகம் சார்பில் தமிழ்நாட்டில் 224 இடங்களில் தானியங்கி வானிலை மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் மீதம் உள்ள 161 இடங்களிலும் விரைவில் அமைக்கப்படும்.

வானிலை காரணிகள்

இதன் வாயிலாக வானிலை காரணிகளான குறைந்த–அதிகபட்ச வெப்பநிலை, ஈரப்பதம், சூரிய ஒளி அளவு, காற்றின் வேகம், இலையின் ஈரப்பதம் ஆகியவற்றை அளவிட முடியும். மேலும் பெறப்படும் தகவல்களைக் கொண்டு விவசாயிகள் தினசரி வேளாண் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

வேளாண் விஞ்ஞானிகள் இந்த தானியங்கி வானிலை மையங்களில் இருந்து பெறப்படும் தகவல்களை அதிக கவனம் செலுத்தி விவசாயிகள் பயன் பெறும் வண்ணம் பரிந்துரைகளை வடிவமைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## நடப்பு நிதி ஆண்டின் முதல் 10 மாதங்களில் நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 23 சதவீதம் அதிகரிப்பு



பி கே கிருஷ்ணகுமார் – எஸ் சனந்தகுமார்

கொச்சி

நடப்பு நிதி ஆண்டின் முதல் 10 மாதங்களில் (ஏப்ரல்–ஜனவரி) நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 23 சதவீதம் அதிகரித்து 120.33 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

இலக்கு

நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் 112.50 கோடி டாலர் மதிப்பிற்கு நறுமண பொருள்கள் ஏற்றுமதி மேற்கொள்ள இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் முதல் 10 மாதங்களில் டாலர் மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி, நிர்ணயிக்கப்பட்ட இலக்கைக் காட்டிலும் 107 சதவீதம் அதிகரித்துள்ளது. ரூபாய் மதிப்பு அடிப்படையிலும் ஏற்றுமதி இலக்கை விட 108 சதவீதம் உயர்ந்துள்ளது. ரூபாய் மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 18 சதவீதம் அதிகரித்து ரூ.5,485.40 கோடியாக உயர்ந்துள்ளது.

அமெரிக்க டாலர்

சென்ற நிதி ஆண்டின் முதல் 10 மாதங்களில் ஒரு அமெரிக்க டாலரின் வெளிமதிப்பு சராசரியாக ரூ.47.50 ஆக இருந்தது. இது நடப்பு நிதி ஆண்டின் முதல் 10 மாதங்களில்

ரூ.45.50 ஆக குறைந்துள்ளது. அதாவது டாலர் மதிப்பு குறைந்து ரூபாய் மதிப்பு உயர்ந்துள்ளது. இது ஏற்றுமதியாளர்களுக்கு பாதகமான அம்சமாகும். இதனை வெளிப்படுத்துகின்ற வகையில் டாலர் மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி 23 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், ரூபாய் மதிப்பு அடிப்படையில் 18 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில் அளவின் அடிப்படையில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 5 சதவீதம் மட்டுமே அதிகரித்து 4.14 லட்சம் டன்னிலிருந்து 4.33 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. டாலர் மதிப்பு அடிப்படையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி இதைக் காட்டிலும் 5 மடங்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இது இந்திய நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது.

அன்னிய செலாவணி

நறுமண பொருள்கள் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 93 சதவீதம் என்ற அளவில் உள்ளது. இன்னும் இரண்டு மாதங்கள் உள்ள நிலையில், அளவின் அடிப்படையிலும் ஏற்றுமதி நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கையும் விஞ்சி விடும் என்று வர்த்தக நிபுணர் தெரிவித்தார். நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதால் அன்னியச் செலாவணி கையிருப்பு அதிகரித்து, நடப்பு கணக்கு பற்றாக்குறையை கட்டுக்குள் கொண்டு வர முடியும்.

நாட்டின் மொத்த ஏற்றுமதியில் நறுமண பொருள்களின் பங்களிப்பு 0.6 சதவீதம் என்ற அளவில் உள்ளது. சென்ற 2009-10-ஆம் நிதி ஆண்டில் ரூ.5,560.50 கோடி (117.38 கோடி டாலர்) மதிப்பிற்கு 5.03 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதியாகியுள்ளன. நறுமண பொருள்களில் மிளகாய், இஞ்சி, வெந்தயம், பூண்டு, நறுமண எண்ணெய் போன்றவற்றின் ஏற்றுமதியில் விறுவிறுப்பு ஏற்பட்டுள்ளது.

முதல் 10 மாதங்களில் ரூ.1,255 கோடி மதிப்பிற்கு 2 லட்சம் டன் மிளகாய் ஏற்றுமதியாகியுள்ளது. இது அளவு மற்றும் ரூபாய் மதிப்பு அடிப்படையில் முறையே 22 சதவீதம் மற்றும் 19 சதவீதம் அதிகமாகும். சென்ற 2009-10-ஆம் நிதி ஆண்டில் ரூ.1,292 கோடி மதிப்பிற்கு 2.04 லட்சம் டன் மிளகாய் ஏற்றுமதியாகி உள்ளன.

சீனா

இந்நிலையில் மிளகாய் உற்பத்தியில் உலக அளவில் முதலிடத்தில் உள்ள சீனாவில் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இது, இந்திய மிளகாய் ஏற்றுமதியாளர்களுக்கு சாதகமான அம்சமாகும். எனவே இனிவரும் மாதங்களில் மிளகாய் ஏற்றுமதி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில் மிளகு ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 4 சதவீதம் சரிவடைந்து 16,295 டன்னிலிருந்து 15,700 டன்னாக குறைந்துள்ளது. அதேசமயம் ரூபாய் மதிப்பு அடிப்படையில் இது 14 சதவீதம் அதிகரித்து ரூ.269.36 கோடியிலிருந்து ரூ.307.47 கோடியாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ மிளகிற்கு சென்ற நிதி ஆண்டில் ரூ.159.15 என்ற விலை கிடைத்தது. இது நடப்பு நிதி ஆண்டில் ரூ.195.84 ஆக உயர்ந்துள்ளது.

இஞ்சி–ஏலக்காய்

இஞ்சி ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் இரண்டு மடங்கு அதிகரித்து முறையே 10,500 டன் மற்றும் ரூ.64.54 கோடியாக உயர்ந்துள்ளது. அதேசமயம் ஏலக்காய் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 1,540 டன்னிலிருந்து 780 டன்னாகவும், ரூபாய் அடிப்படையில் ரூ.120.89 கோடியிலிருந்து ரூ.91.19 கோடியாகவும் குறைந்துள்ளது.

## வெங்காயம், பருப்பு விலை குறைவால் உணவு பொருள் பணவீக்கம் 10.39 சதவீதமாக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் பருப்பு வகைகள் விலை குறைந்துள்ளதால்,

பிப்ரவரி 19–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பொருள் பணவீக்கம் 10.39 சதவீதமாக குறைந்துள்ளது. இதற்கு முந்தைய வாரத்தில் இது 11.49 சதவீதமாக இருந்தது.

உருளைக்கிழங்கு

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில் ஓர் ஆண்டு கால அடிப்படையில் வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு விலை முறையே 3.64 சதவீதம் மற்றும் 12.66 சதவீதம் குறைந்துள்ளது. பருப்பு வகைகள் விலை 5.02 சதவீதமும், கோதுமை விலை 2.06 சதவீதமும் குறைந்துள்ளது.

அதேசமயம் பழங்கள், காய்கறிகள் விலை முறையே 16.34 சதவீதம் மற்றும் 14.29 சதவீதம் உயர்ந்துள்ளது. முட்டை, இறைச்சி மற்றும் மீன் ஆகியவற்றின் விலை 14.5 சதவீதமும், பால் விலை 11.07 சதவீதமும் உயர்ந்துள்ளது. எரிபொருள் பணவீக்கம் 12.14 சதவீதத்திலிருந்து 12.56 சதவீதமாக உயர்ந்துள்ளது.

உணவு பொருள் பணவீக்கம் முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது தற்போது 1.1 சதவீதம் குறைந்துள்ளது. சென்ற சில மாதங்களாக நாட்டின் உணவு பொருள் பணவீக்கம் 15 சதவீதத்தை தாண்டி இருந்தது. சென்ற நிதி ஆண்டில் உணவு தானியங்கள் உற்பத்தி குறைந்ததால், பணவீக்கம் அதிகரித்து இருந்தது. அதேசமயம் நடப்பு நிதி ஆண்டில் உற்பத்தி ஓரளவிற்கு நன்றாக உள்ள நிலையிலும் உணவு பணவீக்கம் அதிகரித்து வந்தது. தனிநபர் செலவிடும் வருவாய் அதிகரித்தள்ளதே இதற்கு காரணமாகும் என்று பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

பாரத ரிசர்வ் வங்கி

நாட்டில் பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி, சென்ற ஓர் ஆண்டு காலத்தில் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை ஏழுமுறை உயர்த்தியது. இதற்கு பலன் கிடைத்துள்ளது. உணவு பொருள் பணவீக்கம் விரைவில் ஒற்றை இலக்க அளவிற்கு குறைந்துவிடும் என பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உணவு பொருள்கள் விலை ஓரளவிற்கு குறைந்துவருவதால், மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம் பிப்ரவரி மாதத்தில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஜனவரி மாதத்தில் இது 8.23 சதவீதமாக இருந்தது.

இப்பணவீக்கத்தை 4–5 சதவீதமாக குறைக்கும் வகையில் மத்திய அரசு பணப்புழக்கத்தை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை

*மேற்கொள்ளும் என்று பிரதமமந்திரியின் பொருளாதார ஆலோசனைக் குழுத் தலைவர் சி. ரங்கராஜன் தெரிவித்துள்ளார்.*

### *வெங்காயம் ஏற்றுமதி விலை 450 டாலராக குறைக்கப்பட்டது*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*

*வெங்காயம் மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மத்திய அரசு 600 டாலரிலிருந்து (ஒரு டன்) 450 டாலராக குறைத்துள்ளது.*

*இதுகுறித்து, வெளிநாட்டு வர்த்தகத்திற்கான பொது இயக்குனரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் "பெங்களூர் ரோஸ் மற்றும் கிருஷ்ணாபுரம் வெங்காயம் நீங்கலாக, இதரவகை வெங்காயங்களுக்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை 450 டாலராக குறைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.*

*கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஒரு கிலோ வெங்காயம் ரூ.70–ஆக உயர்ந்து இருந்தது. இதனையடுத்து மத்திய அரசு சென்ற டிசம்பர் மாதத்தில், வெங்காயம் ஏற்றுமதிக்கு தடைவிதித்ததுடன், இறக்குமதி வரியையும் ரத்து செய்தது.*

*வெங்காயம் விலை தற்போது குறைந்து வருவதால், குறைந்தபட்ச ஏற்றுமதி விலை 450 டாலராக குறைக்கப்பட்டுள்ளது. இந்த விலைக்கு குறைவாக நிறுவனங்கள் வெளிநாடுகளுக்கு வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய முடியாது. பாகிஸ்தான் ஒரு டன் வெங்காயத்தை 330 டாலர் விலையில் ஏற்றுமதி செய்கிறது. எனவே இந்திய நிறுவனங்கள் வெங்காயம் ஏற்றுமதியில் வெளிநாட்டு நிறுவனங்களுடன் போட்டியில் ஈடுபட முடியாது என்று ஏற்றுமதி நிறுவனம் ஒன்றின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

*நடப்பு ஆண்டில் இதுவரையிலான காலத்தில் 12 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதியாகியுள்ளது.*

## இந்திய உணவு கழகத்திற்கு இதுவரை வீணாகும் உணவு தானியங்களால் ரூ.484 கோடி இழப்பு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி

இந்திய உணவுக் கழகத்திற்கு, வீணாகும் உணவு தானியங்களால் நடப்பு நிதி ஆண்டில் இதுவரை ரூ.484.76 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது என உணவு மற்றும் பொது விநியோக துறைக்கான மத்திய அமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்தார்.

நெல் – கோதுமை

இந்திய உணவுக் கழகம் விவசாயிகளிடமிருந்து நெல், கோதுமை போன்ற முக்கிய உணவு தானியங்களை கொள்முதல் செய்கிறது. சேமிப்புக் கிடங்குகளில் போதிய வசதிகள் இல்லாதது, சரக்குப் போக்குவரத்தின் போது உணவு தானியங்கள் சிதறுவது, கிடங்குகளில் தானியங்கள் கெட்டுப் போவது போன்ற காரணங்களால் இக்கழகத்திற்கு கணிசமான அளவிற்கு இழப்பு ஏற்படுகிறது. சென்ற நிதி ஆண்டில் ஏற்பட்ட இழப்பு ரூ.437.87 கோடியாக இருந்தது.

நடப்பு நிதி ஆண்டில் ஜனவரி மாதம் வரையிலான 10 மாதங்களில் இந்திய உணவு கழகத்தின் கிடங்குகளில் கெட்டுப் போன உணவு தானியங்களின் அளவு 6,348 டன் ஆகும். மேலும் இதுவரை இக்கழகம் முறைகேடுகள் மற்றும் ஊழலுக்கு எதிராக 116 வழக்குகளை தொடுத்துள்ளதாக தெரிகிறது.

பறிமுதல்

சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்தில், கடத்தப்பட இருந்த 1,238 மூட்டை கோதுமையையும், 461 மூட்டை அரிசியையும் (தலா 50 கிலோ) பறிமுதல் செய்ததாக டெல்லி அரசு தெரிவித்தது. இந்த உணவு தானியங்கள் ரேஷன் கடைகளுக்கு செல்ல வேண்டியதாகும். பொது விநியோக முறையில் வழங்கப்படும் உணவு தானியங்களின் தரம் குறைவாக உள்ளதாக இதுவரை மத்திய அரசுக்கு மூன்று புகார்கள் வந்துள்ளன.

## கூடலூர் பகுதியில் திடீர் சாரல் மழை: பூத்து குலுங்கும் காபி பயிர்களால் விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு



கூடலூர் பகுதியில் காபி பயிர்கள் பூத்து குலுங்குவதை படத்தில் காணலாம்.

கூடலூர், மார்ச்.4–

கூடலூர் பகுதியில் திடீர் சாரல் மழை பெய்ததால் காபி பயிர்கள் பூத்து குலுங்குகின்றன. இத னால் விளைச்சல் அதிக ரிக்க வாய்ப்பு உள்ளது என காபி விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

கோடை காலம் தொடக்கம்

நீலகிரி மாவட்டத்தில் கோடைகாலம் தொடங்கி உள்ளது. இதனால் நீர்நிலை களில் தண்ணீர் வரத்து பெரு மளவு குறைந்து வருகிறது. பகலில் கடும் வெயிலும் இரவில் பனிப்பொலிவும் நிலவி வருவதால் பொதுமக் களும் பல்வேறு உடல் உபாதைகளுக்கு ஆளாகி வருகின்றனர். இந்த நிலையில் கூடலூர் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு அடிக்கடி சாரல் மழையும், சில சமயங்களில் பரவலான மழை பெய்தது. இதனால் கோடை வெயி லின் தாக்கம் குறைந்திருந்தது. இந்த திடீர் மழையால் வறட்சியான காலநிலையில் இருந்த தேயிலை செடிகள் மீண்டும் பசுமைக்கு திரும்பியது. இதேபோல் காபி பயிர்கள் அனைத்து பூக்க தொடங்கின. தற்போது கூடலூர் பகுதியில் அராபிக்கா, ரொபஸ்டா ரக காபி பயிர்கள் நன்கு பூத்து குலுங்குகின்றன.

விளைச்சல் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பு

காபி விதைகள் அறுவடை தற்போது முடிவுற்ற நிலையில் உள்ளன. வழக்கமாக ஏப்ரல், மே மாதங்களில் காபி பூக்க தொடங்கும். ஆனால் இந்த ஆண்டு கடந்த சில தினங்

*களுக்கு முன்பு பெய்த கோடை மழையால் காபி செடிகள் பூத்து மணம் வீசி வருகிறது. தொடர்ந்து மழை பெய்யாமல் இதே காலநிலை நீடித்தால் பூக்கள் உதிராமல் காய்க்க அதிக வாய்ப்பு உள்ளது.*

*இதனால் வரும் காலங்களில் கடந்த ஆண்டை காட்டிலும் காபி விளைச்சல் அதிகரிக்கும் என காபி விவசாயிகள் எதிர் பார்த்துள்ளனர். இது குறித்து காபி வாரிய ஆய்வாளர் ராமஜெயத்திடம் கேட்ட போது, தற்போது மழை பெய்ததால் காபி பூக்கள் பூத்துள்ளன. இதனால் காபி செடிகளுக்கு மிகுந்த நன்மை பயக்கும். இதனால் வரும் காலங்களில் விளைச்சலும் அதிகரிக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

## நீலகிரி வடக்கு வன கோட்டத்தில் விலங்குகள் கணக்கெடுப்பு பணி நாளை முதல் நடக்கிறது

*மசினகுடி, மார்ச்.4–*

*நீலகிரி வடக்கு கோட்ட வனப்பகுதிகளில் நாளை (சனிக்கிழமை) முதல் 2 நாட்கள் வன விலங்குகள் கணக்கெடுப்பு பணி நடைபெற உள்ளது.*

*வன விலங்குகள் கணக்கெடுப்பு*

*நீலகிரி மாவட்டத்தில் வடக்கு வனக்கோட்டத்துக் குட்பட்ட சீகூர், சிங்காரா, கோத்தகிரி, தெங்குமரஹாடா, ஊட்டி வடக்கு போன்ற வனப்பகுதிகள் உள்ளன. இந்த வனப்பகுதியில் யானை கள், சிறுத்தைகள், மான்கள், கரடிகள், புலிகள், காட்டெரு மைகள் உள்பட பல்வேறு வன விலங்குகள் காணப்படு கின்றன.*

*ஆண்டு தோறும் இந்த வனப்பகுதியில் கணக்கெடுப்பு பணி நடைபெறு வழக்கம். இதன்படி இந்த ஆண்டுக் கான வன விலங்குகள் கணக்கெடுப்பு நாளை (சனிக்கிழமை) தொடங்குகி றது. கணக்கெடுப்பு பணி வருகிற 6–ந் தேதி வரை 2 நாட்கள் நடக்கிறது.*

*3 முறைகள்*

*கணக்கெடுப்பு பணி 3 முறைகளில் நடைபெற உள்ளது. கால்தடத்தை கண்டு விலங்குகளை அறிதல், நீர் நிலைகளுக்கு நேரடியாக சென்று வன விலங்குகளை கண்காணித்தல், காட்டுக்குள் சென்று நேரில் காணும் வன விலங்குகளை கணக்கெடுத்தல் என 3 முறைகளில் நடத்தப் பட உள்ளது. இந்த பணியில் வனத்துறை ஊழியர்கள், தன்னார்வலர்கள் உள்பட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.*

*இதற்கான ஏற்பாடுகளை நீலகிரி கானுயிர் சங்க தலைவர் ஜெயச்சந்திரன் மற்றும் உறுப்பினர் விஜய் ஆகியோர் செய்து வருகின்றனர். வன விலங்குகள் கணக்கெடுப்பு பணிகள் குறித்த பயிற்சி நேற்று வனத்துறை ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டது.*

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,840-2,900

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 3,250-3,350

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 7,350-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை (சாக்கு வரிஉள்பட) 1,400-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட டின் (வரி உள்பட) 1,764-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 11,500-00
டின் (15கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 12,500.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,700-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ டின் (வரிஉள்பட) 1,155.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,285.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,110.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 595-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,மார்ச்.3-
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 19,000 | 190.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,400 | 88.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு(வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| சுண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,900 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,மார்ச்.3-
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 12,373
2. ஜெயதார் 22 எம்.எ ரூ. ——
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 16,207
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 15,803
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 16,450
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 16,169
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 22,777

## கோவை உழவர் சந்தை

கோவை,மார்ச்.3-
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

### காய்கறிகள் (கிலோவுக்கு)

| | | |
|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 40-00 |
| கத்தரிக்காய் | ரூ. | 12-18 |
| வெண்டைக்காய் | ரூ. | 8-12 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 4-6 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6-6.50 |
| புடலை | ரூ. | 8-10 |
| பீர்க்கான்காய் | ரூ. | 18-20 |
| சுரைக்காய் | ரூ. | 10-12 |
| பாகற்காய் | ரூ. | 8-12 |
| கொத்தவரை | ரூ. | 16-00 |
| பூசணிக்காய் | ரூ. | 22-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 10-11 |
| மேராக்காய் | ரூ. | 15-16 |
| பச்சை மிளகாய் | ரூ. | 10-00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 14-00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 24-25 |
| பெரியவெங்காயம் | ரூ. | 13-00 |
| இஞ்சி | ரூ. | 32-55 |
| முருங்கைக்காய் | ரூ. | 40-44 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 16-18 |
| சேனைகிழங்கு | ரூ. | 20-00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 |
| சிறுகிழங்கு | ரூ. | 32-00 |
| முள்ளங்கி | ரூ. | 6-8 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 24-26 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 8-12 |
| நூல்கோல் | ரூ. | 16-00 |
| கொத்தமல்லி | ரூ. | 12-16 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 16-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-12 |
| கவர்கோஸ் | ரூ. | 26-00 |
| புதினா | ரூ. | 16-00 |
| காலிப்பிளவர் | ரூ. | 8-10 |
| பொறியல் தட்டை | ரூ. | 16-00 |
| பச்சை மொச்சை | ரூ. | 32-00 |
| தேங்காய் | ரூ. | 10-15 |
| பட்டாணி | ரூ. | 30-35 |
| பூண்டு | ரூ. | 120-180 |
| கறிவேப்பிலை | ரூ. | 40-00 |
| அகத்தி | ரூ. | 12-00 |
| வாழைக்காய் | ரூ. | 14-00 |
| திராட்சை | ரூ. | 26-00 |
| திராட்சை (பச்சை) | ரூ. | 56-00 |
| குடைமிளகாய் | ரூ. | 30-32 |
| சாதா பீன்ஸ் | ரூ. | 14-00 |
| டபுள்பீன்ஸ் | ரூ. | 28-00 |
| கறிபீன்ஸ் | ரூ. | 14-00 |
| புஸ்பீன்ஸ் | ரூ. | 18-21 |
| மாங்காய் | ரூ. | 35-90 |
| காளான் | ரூ. | 80-140 |
| இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| சப்போட்டா1கிலோ | ரூ. | 16-17 |
| கொய்யா1கிலோ | ரூ. | 22-00 |
| மாதுளை1கிலோ | ரூ. | 170-00 |
| பப்பாளி 1 கிலோ | ரூ. | 16-17 |
| வரமிளகாய் | ரூ. | 90-00 |
| ஆப்பிள் | ரூ. | 90-110 |
| சாத்துக்குடி | ரூ. | 28-00 |
| நெல்லிக்காய் | ரூ. | 20-30 |
| ஆரஞ்சு | ரூ. | 38-00 |
| வெள்ளரி | ரூ. | 26-00 |
| புளி 1 கிலோ | ரூ. | 80-00 |
| பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30-00 |
| அவரை | ரூ. | 8-12 |
| அவரை (ஊட்டி) | ரூ. | 60-00 |
| நிலக்கடலை | ரூ. | 36-00 |
| மக்காச்சோளம் | ரூ. | 3.50 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,மார்ச்.3-
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 84.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1160 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1200 | 75.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1070 | 72.00 |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 74.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,420 | 110.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1530 | 120.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,730 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,030 | 61.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,250 | 80.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,275 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1,025 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,080 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,080 | - |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.400.00 | ரூ. 600.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 2.00 | ரூ. 4.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.12.00 | ரூ.18.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.4.00 | ரூ.7.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.3.00 | ரூ.4.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| மேராக்காய் | ரூ.5.00 | ரூ.8.00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.21600 |
| மிளகு (சேட்டன்) | ரூ.21800 |
| மிளகு (வயநாடன்) | ரூ.22900 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 7100 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 7500 |
| சுக்கு(புதியது) | ரூ.16000 |
| சுக்கு(பழையது) | ரூ.17,000 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.9300 |
| கொப்பரை நாடன் | ரூ.6200 |
| கொப்பரை ராசு | ரூ.6000 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6300 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ.6600 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6000 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22600 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23600 |
| ரப்பர் பால் | ரூ. 17550 |
| காப்பி | ரூ. 9300 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 5100 |
| நேந்திரகாய் | ரூ. 1200 |
| இஞ்சி | ரூ. 1450 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,720.00 | 15890.00 | 15880.00 |
| ஒரு கிராம் | 1,965.00 | 1,980.00 | 1,985.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 52,620.00 | 55,000.00 | 55,000.00 |
| ஒரு கிராம் | 56.30 | 55.00 | 55.00 |

## ஒழுங்கு முறை விற்பனை கூடம்

**மஞ்சள் (கோவை)**

தனிவிரலி ரூ.11700-12853
தனிகிழங்கு ரூ.10500-11003

**தேங்காய்**

திருப்பூர் ரூ.1300-2200
பொள்ளாச்சி ரூ.500-950

**மக்காச்சோளம்**

தொண்டாமுத்தூர் ரூ.900-1000

**நிலக்கடலை (காய்ந்தது)**

தொண்டாமுத்தூர் ரூ.3600-4000

**வரமிளகாய்**

திருப்பூர் ரூ.5000-7500

**ராகி**

திருப்பூர் ரூ.800-1000

**கம்பு**

திருப்பூர் ரூ.900-1200

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.187.00 | அதிகபட்சவிலை | ரூ.294.00 |
| சராசரி விலை | ரூ.184.00 | சராசரி விலை | ரூ.259.00 |
| குறைந்தபட்சவிலை | ரூ.181.00 | குறைந்தபட்சவிலை | ரூ.200.00 |

**பட்டு நூல் ரூ.2,230**